28.09.2022

அ.வ.எண்.21/2018

வா.சா.1 - பழனிவேல் த/பெ.சுப்பிரமணியன்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

நான், என்னுடைய தந்தை மற்றும் தாயார் அனைவரும் தாவா சொத்தில் தான் வசித்து வருகிறோமா என்று கேட்டால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் என்னுடைய தகப்பனார் உயிருடன் தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். தற்போது அவர் இறந்துவிட்டார். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்று கேட்டால் அரசு மூலமாக என்னுடைய தாத்தாவுக்கு கிடைத்தது. அவரிடமிருந்து என்னுடைய தகப்பனாருக்கு கிடைத்தது. நான் தனிப்பட்ட முறையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் சரிதான். வழக்கின் பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு எந்த திசையில் வசிக்கிறார்கள் என்று கேட்டால் வடக்கு திசையில் வசித்து வருகிறார்கள். சர்வே எண்.336ல் வசித்து வருகிறார்கள். என்னுடைய தகப்பனார் பெயரில் இதே நீதிமன்றத்தில் அவருக்கெதிராக அ.வ.எண்.188/2008 தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் 1ஆம் பிரதிவாதியின் கணவர் அ.வ.எண்.188/2008 தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.188/2008ல் வாதியான கணேசன் என்பவர் இறந்ததற்கு பிறகு அவருடைய வாரிசுகள் அந்த வழக்கை நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கை பற்றி தெரிந்தும், அந்த வழக்கில் கொடுத்த தீர்ப்பாணையை பற்றி தெரிந்தும் இப்போது நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் அ..வ.எண்.188/2008 பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.188/2008 வழக்கின் தீர்ப்புக்கு மேல் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், அந்த நிலையில் வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த அசல் வழக்கில் மேல்முறையீடு எதுவும் செய்யாமல் இப்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்று கேட்டால் தெரியும். கிழக்கு மேற்காக செல்லும் சிமெண்ட் சாலைக்கு தெற்காக தாவா சொத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். பரமசிவம் என்பவரின் சொத்துக்கு வடக்கு புறமாக தாவா சொத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். குஞ்சிப்பிள்ளை மற்றும் வெற்றிகுமார் அவர்களின் சொத்துக்கு கிழக்கு புறமாக தாவா சொத்து அமைந்துள்ளது என்று

சொன்னால் சரிதான். சிங்காரவேல் பிள்ளை, காளியப்ப பிள்ளை ஆகியோர் நிலங்களுக்கு மேற்கு புறமாக தாவா சொத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்து மேலே குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகளுக்குள் அமைந்துள்ளதா என்று கேட்டால் இல்லை. அ.வ.எண்.188/2008ல் மேற்கூறிய நான்கெல்லைகள் தான் இந்த வழக்கின் பிரதிவாதிகளின் சொத்துக்கள் என்று தீர்ப்பாகியுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆட்சேபனையின்றி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)